விதை தயார் செய்வதோடு, தனிப்பட்டவர்கள் அதைத் தருவிக்கத் தயாராயிருந்தால் அவர்களுக்கு பெர்மிட் வழங்க முயற்சி செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன் : கிரேட் ஸ்காட் உருளைக்கிழங்கு விதை கிடைக்காததால் அதிகப்படி வரவழைக்க முடியவில்லை. பாரத நாட்டுப் பகுதிகளில் இருந்து அதிகப்படி விதை கொடுத்து உதவி செய்யலாம் என்று இருக்கிறது. ஆனால் க்ரேட் ஸ்காட்தான் விவசாயிகள் வேண்டுவது. அதை மீண்டும் அதிகப்படியாக வரவழைத்துக் கொடுக்கக் கேட்டிருக்கிறோம் மத்திய சர்க்காரை, அவர்களும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிகமாக கொடுக்கப்படவில்லை. இருந்தாலும் இன்னும் முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

ஆண்டிப்பட்டி பிராந்திய அபிவிருத்தி (மதுரை)

* 155 கேள்வி.—திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் (திருமதி அ. கிருஷ்ணவேணி அவர்களின் சார்பாக) : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா திருமங்கலம் தாலுகாவிலுள்ள ஆண்டிப்பட்டி பிராந்தியத்தில் அபிவிருத்திக்காக சென்ற ஆண்டு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது?

(இ) இவ்வாண்டு எவ்வளவு ஒதுக்க உத்தேசம்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) An allotment of Rs. 2,11,477 for 1961–62 and an allotment of Rs. 2,01,524 for 1962–63 have been made for Andipatti Block for Village Works, Agricultural Development, loans distribution and social education.

பாலங்கள் கட்டுதல்

* 158 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லா, ஏரலின் அருகிலும், சேரன் மகாதேவியிலும் தாம்பிரபரணிக்கு குறுக்கே புதுப்பாலங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டதா?

(இ) வேலை எப்போது தொடங்கும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Bridge near Eral : No, Sir.

Causeway at Shermadevi : Yes, Sir.

(b) Bridge near Eral : After technical sanction of the Estimates.

Causeway at Shermadevi : Being started.

SRI M. S. SELVARAJAN : Sir, may I know the estimated cost of the works?

6th July 1962]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the work of constructing a causeway across the Thambaraparani river at Shermadevi has been administratively approved under the Central Road Fund State allocation for Rs. 6 lakhs and a revised administrative approval of the Government of India was also obtained for Rs. 7,80,000.

* 159 கேள்வி.—திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் (திருமதி அ. கிருஷ்ணவேணி அவர்களின் சார்பாக) : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆண்டிப்பட்டி பஞ்சாயத்து யூனியன் குன்னூர் அம்மச்சியாபுரம் ரஸ்தாவிற்கும், தேனி பஞ்சாயத்து யூனியன் அரண்மனை புதூர்-அயனூர்புரம் ரஸ்தாக்களுக்கும் குறுக்கே ஓடும் வைகை யாற்றில் ஒரு பாலம் அமைக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

Minor irrigation schemes.

*160 Q.—SRI A. P. DHARMALINGAM (on behalf of SRI R. S. VEERAPPA CHETTIAR) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any proposal to raise the food value of Rs. 1,500 per ton for sanctioning minor irrigation schemes; and

(b) if so, to what limit?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) The maximum limit fixed for sanction of schemes included in the Special Minor Irrigation Programme is Rs. 2,000 per ton. There is no proposal to raise it.

பஞ்சாயத்துக்கள் (தொழில் வரி விகிதாசாரம்)

* 161 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை பஞ்சாயத்துச் சட்டத்தில் தொழில் வரி விகிதாசாரத்தினை மாற்றி அமைக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஸார், தொழிற்சாலைகள் இருக்கின்ற பஞ்சாயத்துக்களில் இப்போது இருக்கின்ற ஃப்ரபொஷன் டாக்ஸ் (Profession tax) விகிதாசாரப்படி ஆறு மாதத்திற்கு ஒரு முறை 60 ரூபாய் வரி என்று நிர்ணயிக்கப்படுகிறது. இது மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தால், கம்பெனிகளிடமிருந்து உயர்ந்த பட்சம் வசூல் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.